1982 ஏப்ரல் 7]

திரு. உ. சுப்பிரமணியன் : இதிலே காவல் துறையினரே, இப்படிச் செய்திருக்கிறார்களே?........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேலியே பயிரை மேய்வதாக பழமொழி இருக்கிறது. அவர்களும் மனிதர்கள்தன். தவறு செய்யலாம். யார் தவறு செய்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10.20)

(ஆ) குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய தணிக்கை அறிக்கை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய ஆடிட் ரிப்போர்ட் 1972-73 ஆம் ஆண்டிலிருந்து 1977-78வரையிலே, கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு அதாவது ஒருமாமாங்கம் என்று சொல்வார்களே, அந்த அளவுக்கு இங்கே வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன? இன்றைக்கு மட்டும் 6 ரிப்போர்ட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். ஏதோ சட்டமன்றத்திற்கு ரிப்போர்ட் கொடுக்கவேண்டுமென்று ஒரு சடங்காக இருக்கிறதே தவிர, இதுபோன்ற முக்கியமான ரிப்போர்ட்டுகளை முன்பே கொடுத்திருப்பார்களானால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் படித்துப் பார்த்து கருத்துக்களை நல்லமுறையிலே கூற விவாதத்திற்கு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கும். உங்கள் மூலமாக கேட்டுக் கொள்வதெல்லாம் 7, 8 ரிப்போர்ட்டுகளை பத்து ஆண்டுகளுக்குப் பின்னாலே வைக்கிற முறையை இத்தோடு விட்டு விட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள், அவர்கள் வருங்காலத்தில் நல்ல விவாதம் நடைபெறுவதற்கான முறையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இதற்கு என்ன சொல்லவிருக்கிறார்கள் என்பதை அறிய ஆவலாய் இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1972, 73 ஆண்டிற்கு வைக்கும்போதே, 77, 78-க்கும் வைத்துவிட்டதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டுவார்கள் என்று நான் கருதுகிறேன். 1972-73-லேயிருந்து, 1976-77 வரையில் ஏன் இவ்வளவு காலதாமதம் ஆயிற்று என்பதை மாண்புமிகு உறுப்பினர் வலியுறுத்தியதைப்போல, பரிசீலனை செய்து இனி இதுபோன்று நடக்காமல் பார்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.